| சாட்சி : PW1<br>வளர்மதி | அ.வ.எண்.95/2023 | 09.09.2025 |
|---|---|---|

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

6) இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள பிரதிவாதிகள் உங்கள் உறவினர்கள் என்றால் இல்லை, எங்கள் சமூகத்தை சார்ந்தவர்கள். நீங்கள் லெட்டர் பேடில் தேதி குறிப்பிடாமல் கையொப்பம் போட்டு வைத்திருப்பீர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளிடம் கொடுத்த லெட்டர் பேடில் எழுதி கொடுத்தீர்களா அல்லது தட்டச்சு செய்து கொடுத்தீர்களா என்றால் இரண்டுமே நான் செய்து கொடுக்கவில்லை. நீங்கள் பிரதிவாதிகளிடம் தேதி குறிப்பிடாமல் தட்டச்சு செய்து லெட்டர் பேடு கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் உங்களுடைய லெட்டர்பேடை தவறாக பயன்படுத்தியது சம்மந்தமாக அவர்கள் மீது இதுவரை சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7) பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 7 வது பத்தியில் 14.12.2014 ம் தேதி ICICI வங்கி திருச்சி கிளையில் உங்கள் பெயரில் ரூ.5 லட்சம் 2 ம் பிரதிவாதியின் தந்தையான சந்திரசேகரனால் டெப்பாசிட் செய்யப்பட்டு, 2 ம் பிரதிவாதியின் தந்தையான சந்திரசேகரனை வாரிசாக நியமனம் செய்யப்பட்டதாக என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் என்னுடைய பணத்தை தான் டெப்பாசிட் செய்தேன். 2 ம் பிரதிவாதியின் தந்தை எனக்கு அந்த சமயம் விபத்து ஏற்பட்டிருந்தததால் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவரை நாமினியாக சேர்த்தேன். 07.12.2014 ம் தேதி மீண்டும் அதே வங்கியில் உங்கள் பெயரில் ரூ.5 லட்சம் 2 ம் பிரதிவாதியின் தந்தையான சந்திரசேகரனால் டெப்பாசிட் செய்யப்பட்டு,

1ம் பிரதிவாதியை வாரிசாக நியமனம் செய்யப்பட்டதாக என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு விபத்து ஏற்பட்டிருந்ததால் 1ம் பிரதிவாதியை நாமினியாக காட்டி எனது கையில் இருந்த பணத்தை டெப்பாசிட் செய்தேன்.

8) பொதுவாக ஒரு பெரிய தொகையை வங்கியில் செலுத்துவதாக இருந்தால் நம்பிக்கைக்குரியவர்களை தான் உடன் அழைத்து செல்வார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் உங்கள் உறவினர் என்பதால் தான் அவர்களை நீங்கள் வங்கிக்கு அழைத்து சென்றீர்கள் என்றால் இல்லை. ஒரே ஊரை சேர்ந்தவர் என்பதால் அழைத்து சென்றேன். சந்திரசேகரனை உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊரை சேர்ந்தவர். வா.சா.ஆ.2 ஆவணத்தை நீங்களாக தட்டச்சு செய்து கொடுத்தீர்களா என்றால் ஆம். காவல் நிலையத்தில் வைத்து தான் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இல்லை, தட்டச்சு செய்து நான் புகார் கொடுத்தேன். வா.சா.ஆ.2 புகாரை விசாரித்து என்ன சொன்னார்கள் என்றால் இருவரும் பிரச்சனை செய்யக்கூடாது, நீதிமன்றம் மூலம் பார்த்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். பொதுவாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் மனு ரசீது கொடுப்பது வழக்கம் என்றால் அது எனக்கு தெரியாது.

9) நீங்கள் மனு ரசீது வாங்காததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாததால் வாங்கவில்லை. வா.சா.ஆ.3 ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஸ்ரீரங்கத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணம் உங்களால் தயார் செய்யப்பட்டதா அல்லது நீங்கள் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. எந்த தேதியில் தயாரிக்கப்பட்டது

என்றால் 2023 ம் ஆண்டு மார்ச் மாதம், தேதி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.3 புகார் கொடுத்ததின் பேரில் உங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 புகாரின் பேரில் நடவடிக்கை எடுத்தார்களா என்று நீங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் ரூ.10 லட்சத்தை வங்கி கணக்கு மூலமாகவும், ரூ.5 லட்சத்தை ரொக்கமாகவும் உங்களிடம் கொடுத்தார்கள் என்றால் நான் வாங்கவே இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 புகாரின் மீதான விசாரணையில் நீங்கள் வாங்கிய பணத்தை திரும்ப கொடுக்க வேண்டுமென்று உங்களிடம் சொன்னார்கள் என்றால் இல்லை. நீங்கள் பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கொடுத்த லெட்டர் பேடில் நீங்கள் தான் தட்டச்சு செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் உங்கள் உறவினர் என்பதால் தான் நீங்கள் லெட்டர் பேடை கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.